# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 7/2023 தேதி- 03.07.2026
(PW.1) – ஜார்ஜ் ஸ்டீபன்சன்

**1 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1.புதிய புல எண்.118/14 ன் தெற்கு பக்கம் உள்ள சொத்து என் மனைவியின் பெயரில் ஆவணங்களை ஏற்படுத்துவதற்கு அதற்கு முன்பு இருந்தே அது எங்கள் கைவசத்தில் இருந்து வருகிறது என்றால் நான் விலைக்கு வாங்கிய சொத்தாகும். புதிய புல எண்.118/14 ன் தெற்கு பக்கம் 4 சென்ட் சொத்தை அலங்காமணி மற்றும் தங்கையன் பாதையாக விட்டுக் கொடுத்ததால் தான் 118/15 ன் வடக்கு பக்கத்தில் 4 சென்ட் சொத்தை நான் விட்டுக் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

2. நான் விட்டுக் கொடுத்ததன் அடிப்படையில் தான் அலங்காமணியின் வாரிசுகள் 2005 ஆம் ஆண்டில் அவர்கள் கைவசத்தில் இருந்த சொத்தை அளந்து வரைபடம் தயாரித்து அதை 1 வது பிரதிவாதியின் தகப்பனாருக்கு கிரயமாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, அவ்வாறு ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. 2005 ஆம் ஆண்டில் 1 வது பிரதிவாதியின் தகப்பனார் வாங்கிய சொத்தில் தான் 2017 ல் 1 வது பிரதிவாதி வீடு கட்டி சுற்றி சுவர் அமைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

3. மேற்படி எல்லா விவரங்களும் எனக்கு தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் நட்டு வைத்த இரப்பர் மரங்களுக்கு 1 வது பிரதிவாதியின் வீட்டில் இருந்து தண்ணீர் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 16.08.2021 இல் புதுக்கடை காவல் நிலையத்தில் 1 வது பிரதிவாதியின் மீது புகார் கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில் இல்லை.

4. எனக்கும், 1 வது பிரதிவாதியின் வீட்டிற்கு மேல் 2020 ல் இரப்பர் மரங்கள் விழுந்தது தொடர்பான பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. எப்போது இருந்தது மேற்சொன்னவாறு இரப்பர் மரங்கள் விழுந்தது சம்மந்தமாக இரு தரப்பினருக்கு பிரச்சனை ஏற்பட்டது என்றால் நினைவில் இல்லை. 15.06.2022 ல் மேற்படி இரப்பர்

மரங்களை அகற்றி கேட்டு 1வது பிரதிவாதி எனக்கு எதிராக புதுக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாரா என்றால் நினைவில் இல்லை. மேற்படி புகாரின் அடிப்படையில் காவல் நிலையத்தில் நான் மரங்களை ஒரு வாரகாலத்தில் அகற்றி தருவதாக வாக்குமூலம் அளித்திருந்தேன் என்றால் சரியல்ல.

5. அதன்பிறகு 17.08.2022 அன்று நான் பிரதிவாதியின் வீட்டின் அருகில் தீ வைத்ததாகவும், அதை தடுக்க வந்த பிரதிவாதியின் அண்ணனை வெட்டியதாகவும் ஒரு குற்ற வழக்கு 232/2022 என்ற வழக்கு என் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பொய் வழக்காகும். அது சம்மந்தமாக குழித்துறை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.1170/2022 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கிற்கு பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, முன்பே தாக்கல் செய்தேன்.

6. 2013 யிலிருந்து 2020 வரை நான் ஊரில் இல்லை என்று சொல்லியுள்ள நிலையில், எந்தெந்த ஊரில் பணியாற்றினேன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் நினைவில் இல்லை. மேற்சொன்ன காலக்கட்டங்களில் நான் பணிசெய்த பணியாளர் குறிப்பேட்டை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. 1வது பிரதிவாதியின் தகப்பனார் கிரயம் வாங்கிய தேதியிலிருந்தே தடையில்லாமல் சொத்தை அனுபவித்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றாலும், குற்ற வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. பிரதிவாதியின் சொத்தில் உள்ள வீட்டில் 1வது பிரதிவாதியும், அவருடைய குழந்தைகளும் வசித்து வருகிறார்கள் என்றால் அதை பற்றி தெரியாது. என் வீடும், பிரதிவாதியின் வீடும் 100 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.